[1995 ஏப்ரல் 4

209—

பண்ணையூரில் பாலம் கட்டுதல்

***22290**—திரு. ஆ. *பாலையா:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதியில் பழுதுபட்ட பண்ணையூர் பாலத்தை மாற்றி புதிய பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அப்பால வேலை தொடங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

218—

விளவங்கோடு தொகுதியில் குடிநீர் வசதி அளித்தல்

***19938**—திரு. மா. *சுந்தரதாஸ்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கன்னியாகுமரி மாவட்டம். விளவங்கோடு தொகுதி, குழித்துறை ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விளாத்துறை பேரூராட்சியில் உடவிளை, அப்பட்டுவிளை. சேரிவிளை, கிளாவறவிலை, பருத்தியடப்பு விளை போன்ற பகுதிகளில் குடிநீர் இணைப்புக்குழாய் பொருத்தாதிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வூர்களுக்கு இணைப்புக் குழாய்கள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : விளாத்துறை பேரூராட்சியில் உடவிளை, அப்பட்டுவிளை, சேரிவிளை, கிளாவறவிளை மற்றும் பருத்தியடப்புவிளை கிராமங்களுக்கு குழாய் இணைப்பு செய்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு நீர் உந்து திறனின் அழுத்தத்தை தெரிந்து பின்பு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பின்னர் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]